கொண்ட அளவிலே சில குறிப்பிட்ட இடங்களில் உயர்நிலைப் பள்ளிகளை அமைக்கலாம் என்றும், அப்படிப்பட்ட பள்ளிகளில் 6, 7, 8-வது வகுப்புகள் இருக்காமல் செய்யலாம் என்றும் ஒரு திட்டம் வகுக்கப்பட்டு, இயக்குநர் அவர்களிடம் ஆலோசனை கேட்டிருக்கிறோம். அந்தத் திட்டத்தை ஆராயும்படி கல்வி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். எந்தெந்த இடங்களில் வசதி ஏற்படுகிறதோ அங்கெல்லாம், சென்னையில் எல்லாப் பகுதிகளிலும் 9, 10, 11-வது வகுப்புகள் கொண்ட உயர்நிலைப்பள்ளிகள் ஏற்படுத்தப்பட வேண்டுமென்ற குறிப்பு தரப்பட்டிருக்கிறது. அப்படிச் செய்தால் இட நெருக்கடி தீரும், ஓரளவுக்கு இட நெருக்கடியைத் தவிர்க்கலாம் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

(4) அரசினர் தீர்மானம்.

தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரியத்திற்கு தேர்தல்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, "1959-ம் ஆண்டு தமிழ்நாடு நில மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்த சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 31/1959) 8-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (f) பகுதியின்கீழ், வேளாண்மைத் துறையில் 1968, பிப்ரவரி, 21-ம் நாளன்று வெளியிட்ட 438-ம் எண் ஆணையில் கண்டுள்ளபடி அரசினர் அமைத்த தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரியத்தின் உறுப்பினர்கள் பதவியில் ஏற்பட்ட வெற்றிடங்களில் நியமனம் செய்வதற்கு—1. திரு. சி. கிருஷ்ணமூர்த்தி, எம்.எல்.ஏ., 2. திரு. எஸ். ஜே. ராமசாமி, எம்.எல்.ஏ., 3. திரு. பி. ஜி. கருத்திருமன், எம்.எல்.ஏ. ஆகிய உறுப்பினர்களை மேற்படி வாரியத்தின் உறுப்பினர்களாக இப்பேரவை தேர்ந்தெடுத்தபடியினாலும்,

5—1—1971-ம் நாளன்று சட்டப் பேரவை கலைக்கப்பட்டதன் காரணமாக மேற்கண்ட பிரிவின் (2) உட்பிரிவைச் சேர்ந்த (f) பகுதியில் குறிப்பிட்டுள்ள உறுப்பினர்களின் பதவிக் காலம் 5—1—1971-ம் நாளன்று முடிவடைந்துவிட்டபடியாலும்,

1959-ம் ஆண்டு தமிழ்நாடு நில மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்த சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 31/1959) 8-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் f) பகுதியையொட்டி, மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் ஒரு நாளன்று மேற்கண்ட வாரியத்தின் உறுப்பினர்களாக இருக்கும்படி சட்டப்பேரவையின் மூன்று உறுப்பினர்களை இப்பேரவை தேர்ந்தெடுக்க வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(5) அறிவிப்பு.

தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரியத்திற்கு தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானத்திற்கிணங்க, தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரியத்திற்கு தேர்ந்தெடுப்பதற்கான வேட்பாளர்